மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆண்டித்தேவர் அவர்கள் நன்றி சொல்வதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

* * வேண்டாம். அதை இங்கே அனுமதிப்பதில்லை.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் "(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான சிவில் அறிக்கைகளில் நீர் வழங்கு திட்டங்கள் பற்றிய பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை);

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை)." ஆகிய அறிக்கைகளை அளிக்கிறேன்.

7, அரசினர் தீர்மானம்.

அ. விதி 54 (6) ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 54 (6) ஐ இன்று தளர்த்தி 8 பொருள்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று 8 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்து கொள்ள இருப்பதால் ஓர் உறுப்பினருக்கு ஒரு கேள்விதான் அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.